2009 பிப்ரவரி 23]

நிலையங்களுக்குத் தமிழக அரசு அனுமதி அளித்திருக்கின்றது. இதற்கான பணிகள் எப்போது தொடங்கி, முடிவடையும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறப்பதற்குக் கடந்த வாரம்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். 28 ஆம் தேதிக்குள் அனைத்து மருத்துவமனைகளும், ஆரம்ப சுகாதார நிலையங்களும் தற்காலிகமாக அந்தந்த இடங்களில் திறக்கப்பட வேண்டுமென்று ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அங்கு கட்டடம் கட்டுவதற்கு, ஒரு மருத்துவமனைக்கு ரூ.21 இலட்சம் நிதியும் ஒதுக்கப்பட்டு, அந்தக் கட்டுமானப் பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, வெகுவிரைவில் அந்தக் கட்டுமானப் பணிகள் தொடங்கி, ஓரிரு மாதங்களில் முடிந்துவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சார்பதிவாளர் அலுவலகம்

***63544—திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அச்சரப்பாக்கம் தொகுதி, சித்தாமூரில் சார்பதிவாளர் அலுவலகம் மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மூடப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தைத் திறப்பது என்பது அரசின் கொள்கையாகும். அச்சரப்பாக்கம் தொகுதியிலுள்ள, சித்தாமூர் சார்பதிவாளர் அலுவலகம் மீண்டும் திறப்பதுபற்றி அரசின் நிதிநிலைக்கேற்ப, பொது மக்களின் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-ல் அ.இ.அ.தி.மு.க. அரசால் மூடுவிழா செய்யப்பட்ட சித்தாமூர் சார்பதிவாளர் அலுவலகத்தைச் சுற்றி, சுமார் 63 கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமங்களில் உள்ள மக்கள், தங்களுடைய நிலம், வீடு போன்ற சொத்துக்களைப் பத்திரப் பதிவு செய்வதற்காக, அந்தச் சித்தாமூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குத்தான் வருவார்கள். ஆனால், இப்போது அந்தச் சார்பதிவாளர் அலுவலகம் மூடப்பட்டுவிட்டதால், அங்குள்ள மக்கள் அச்சரப்பாக்கத்திலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கும், செய்யூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கும், மதுராந்தகத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கும், எந்த சார்பதிவாளர் அலுவலகத்திற்கு, எந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், பதிவு செய்வதற்குச் செல்லவேண்டும் என்று தெரியாமல்கூட அலைக்கழிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை அங்கே இருந்து வருகிறது.

முற்பகல் 10–10

தற்போது கிழக்குக் கடற்கரை சாலையிலுள்ள இடைக்கழிநாடு பேரூராட்சியில், சித்தாமூர் போன்ற இடங்களில் நிலத்தின் விலை உயர்ந்து வருவதோடு, செய்யூரில் 4,000 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கும் அனல் மின் திட்டம் வரவிருக்கின்ற காரணத்தால், சித்தாமூரிலே இந்தச் சார்பதிவாளர் அலுவலகம் மீண்டும் திறக்கப்படுமேயானால் நல்ல வருவாய் ஈட்டித் தரமுடியும்; மக்கள் எந்த சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் செல்வது என்று அலைந்து திரிய வேண்டிய நிலையும் மாறும் என்பதால், சித்தாமூரிலே சார்பதிவாளர் அலுவலகம் மீண்டும் திறக்கப்பட வேண்டும்; திறக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

2009 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியில், சார்பதிவாளர் அலுவலகங்களைப் பொறுத்தமட்டில், 40 சார்பதிவாளர் அலுவலகங்கள் மூடப்பட்டுவிட்டன. கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, மூடப்பட்ட 40 சார்பதிவாளர் அலுவலகங்களில், கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக, 15 சார்பதிவாளர் அலுவலகங்கள் மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றன. எனவே, வருகிற நிதியாண்டில், இதற்கான மானியக் கோரிக்கைகளின்போது, நம்முடைய முதல்வர் கலைஞரிடத்தில் உறுப்பினருடைய கோரிக்கைகளை எடுத்துவைத்து, இதனுடைய முக்கியத்துவத்தையெல்லாம் எடுத்துக் கூறி, மீண்டும் திறக்கக்கூடிய முயற்சிகளில் நிச்சயமாக இந்தத் துறையின் சார்பாக ஏற்பாடுகள் செய்யப்படும் என்ற உறுதியை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூரிலே 4,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவிருக்கின்ற காரணத்தால், அங்கே ஒரு சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்படுமா என்று அம்மையார் அவர்கள் கேட்டார்கள். 4,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் 2,000 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். புதிதாக நிலத்தைப் பதிவு செய்யக்கூடிய வாய்ப்பே அந்தக் கிராமத்திலே இருக்காது. எனவே, (குறுக்கீடு) மன்னிக்கவும்; மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அங்கே தனியாக ஒரு சார்பதிவாளர் அலுவலகம் திறக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்தாலும், கிழக்குக் கடற்கரை

[2009 பிப்ரவரி 23

சாலையில், இடைக்கழிநாடு பேரூராட்சியிலெல்லாம் ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. பல்வேறு கிராமங்களிலும் நிலங்கள் இருக்கின்றன. எப்படியிருந்தாலும், அந்த மக்கள் அச்சரப்பாக்கத்திற்கோ அல்லது மதுராந்தகத்திற்கோ செல்கின்ற அந்தச் சூழ்நிலையை மாற்றி அமைத்திட, அந்த மக்களுக்கு உதவுவதற்காக, சார்பதிவாளர் அலுவலகம் சித்தாமூரிலே திறக்கப்பட வேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அமைச்சர் அவர்களுக்கு நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை சித்தாமூரிலே சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட வேண்டும் என்பதாகும். ஆனால், ஒரு சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று சொன்னால், 10 இலட்சம் ரூபாய் தொடர் செலவினமும், தொடராச் செலவினமாக 10 இலட்சம் ரூபாயும் செலவு செய்ய வேண்டிய ஒரு நிலைமை உள்ளது. அதற்கான வருவாய் இருக்குமேயானால் நிச்சயமாக ஆராய்ந்து, தேவைப்படின் திறக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலைப் பகுதியிலே, துணைப் பதிவாளர் அலுவலகம் வேண்டுமென்று கடந்த ஆண்டு நான் இந்த அவையிலே கோரிக்கை வைத்திருந்தேன். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே, ஒரு பகுதியிலே துணைப் பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே குறைந்தது ஆண்டுக்கு 1,000 பதிவுகள் நடைபெற வேண்டுமென்று அரசு ஒரு கொள்கை முடிவு வைத்திருப்பதாகச் சொன்னார்கள். தோகைமலைப் பகுதி 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு திருச்சி, குளித்தலை, நங்கவரம், மணப்பாறை போன்ற பகுதிகளில் பதிவுப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்குள்ள பகுதி மக்கள் சுமார்

2009 பிப்ரவரி 23]

25 கிலோ மீட்டர் பயணம் செய்து அந்தப் பதிவுப் பணிக்காகச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள். மேலும், தோகைமலைப் பகுதி, கல் குவாரிகள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியிலே அடிக்கடி நிறைய பதிவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த 4 இடங்களிலுமுள்ள பதிவுகளை ஆய்வு செய்து, தோகைமலையிலேயே ஒரு துணைப் பதிவாளர் அலுவலகம் அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் ஏற்கெனவே தந்திருக்கிறார்கள். அவருடைய கோரிக்கை, துறையினுடைய செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு, வருகிற மானியக் கோரிக்கையின்போது அவருடைய கோரிக்கை நிறைவேறக்கூடிய அளவிற்குத் துறை முயற்சிகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

46—

விடுதி

***61379—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமகிரிப்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS